
# தியாகி செண்பகராமன்



வாழ்க்கைக் குறிப்பு



## தியாகி செண்பகராமன்

தோற்றம் : 15.09.1891 மறைவு : 26.05.1934

இந்திய சுதந்திரப்போரில் ஈடுபட்ட எண்ணற்ற தியாகசீலர்களில் ஒருவர் செண்பகராமன். இந்தியாவிலிருந்து கடல் கடந்து செல்ல நேரிட்டபோதும், அயல்மண்ணிலிருந்து அன்னை பூமி விடுதலை அடைய செண்பகராமன் பாடுபட்டார். தனது 43 ஆண்டு வாழ்வில் 26 ஆண்டுகளைத் தலைமறைவு வாழ்க்கையாகவே கழித்த செண்பகராமன், ஜெர்மன் சர்வாதிகாரி ஹிட்லர் இந்தியாவுக்கு எதிராகக் கருத்துக் கூறிய போது அவரிடம் "இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு தகுதியான நாடு" என வாதிட்டு ஹிட்லரை வருத்தம் தெரிவிக்க வைத்தார். "ஜெய்ஹிந்த்" என்ற முழக்கத்தை முதன் முதலில் எழுப்பிய செண்பகராமனின் நினைவைப் போற்றும் வகையில் சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் அவரது முழு உருவச்சிலையை, தமிழக அரசின் சார்பில் அமைத்து

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

கலைஞர் மு.கருணாநிதி அவர்கள்

17.07.2008 அன்று திறந்து வைத்தார்.

## வாழ்க்கைக் குறிப்பு

★ கேரள மாநிலம், திருவனந்தபுரம், புத்தன் சந்தை என்ற ஊரில் 1891 செப்டம்பர் 15 ஆம் நாள் செண்பகராமன் பிறந்தார்.

★ இவரது பெற்றோர் பெயர் சின்னச்சாமி பிள்ளை – நாகம்மாள் ஆகும்.

★ 1905 ஆம் ஆண்டு திருவனந்தபுரம் மகாராஜா பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோது ஆங்கில அரசுக்கு எதிராகக் குரல் கொடுத்தார். "பாரதமாதா வாலிபர் சங்கம்" எனும் அமைப்பை நிறுவினார்.

★ 1907 இல் "ஜெய்ஹிந்த்" என்ற முழக்கத்தை முதன்முதலில் எழுப்பினார். இதனால் ஜெய்ஹிந்த் செண்பகராமன் என அழைக்கப்பட்டார்.

★ 1908இல் ஜெர்மன் தாவர–உயிரியல் நிபுணரும் ஜெர்மன் உளவாளியுமான வால்டர் வில்லியம் ஸ்டிரிக்லாந்து என்பவரால் இத்தாலிக்கு அழைத்துச் செல்லப்பட்டு, நேப்பிள்ஸ் நகரத்தில் "பெர்லிஸ்ட் வாங்வேஜ்" கல்லூரியில் சேர்க்கப்பட்டு, அங்கு மொழிக் கல்வி பயின்றார். பின்னர் சுவிட்சர்லாந்து, ஜூரிச் நகரில் பொறியியல் கல்வி பயின்று அதில் டாக்டர் பட்டமும், அதனைத் தொடர்ந்து ஜெர்மன் சென்று பெர்லின் கல்லூரியில் பொறியியல் துறையில் டாக்டர் பட்டமும் பெற்றார்.

★ ஜெர்மனியில் ஆங்கிலேயருக்கு எதிரான இந்திய மக்களின் போராட்டங்கள் குறித்து தொடர் சொற்பொழிவுகள் ஆற்றினார்.

- ★ இந்திய விடுதலைக்காக உலக நாடுகளின் ஆதரவைத் திரட்டும் முயற்சியில் ஈடுபட்டு "சர்வதேச இந்திய ஆதரவுக்குழு (Pro-Indian Committee) என்ற அமைப்பை நிறுவி, "இந்திய ஆதரவு" (Pro-India) என்ற பத்திரிகையை வெளியிட்டார். பெர்லினில் செயல்பட்ட இந்தியப் புரட்சியாளர் குழுவில் இடம் பெற்றார்.

- ★ 'ஓரியண்ட் கிளப்' (Orient Club) என்ற அமைப்பை ஏற்படுத்தி இவற்றின் கிளைகளை பல நாடுகளில் உருவாக்கினார்.

- ★ கெய்சர் சக்ரவர்த்தியின் அந்தரங்க நண்பராக விளங்கி, ஆலோசகராகப் பொறுப்பேற்றார். செண்பகராமனின் திறமையைப் பாராட்டி ஜெர்மன் அரசு வொன் (VON) என்ற பட்டத்தை அளித்துச் சிறப்பித்தது.

- ★ ஜெர்மனி நாட்டு இராணுவத்தில் படைவீரராகச் சேர்ந்து எல்லாப்பயிற்சிகளும் பெற்று திறமையாகச் செயல்பட்டதால் அணித்தலைவராக நியமிக்கப்பட்டார்.

- ★ முதல் உலகப்போர் மூண்டபோது 1914இல் ஜெர்மனியின் 'எம்டன்' போர்க் கப்பலை இயக்கி வந்தார். இந்தியா நோக்கி வரும் வழியில் எம்டன் போர்க் கப்பலால் பல பிரிட்டிஷ் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. 1914 செப்டம்பர் 22இல் 'எம்டன்' கப்பல் சென்னை வந்தது. சென்னையில் இராணுவ நிலைகள் மீது பீரங்கித் தாக்குதல் தொடுக்கப்பட்டபோது, இரண்டு பீரங்கிக் குண்டுகளில் ஒன்று சென்னை உயர்நீதிமன்றத்தின் அருகே விழுந்து வெடித்தது; மற்றொரு குண்டு செயின்ட் ஜார்ஜ் கோட்டை அருகே விழுந்து வெடிக்கவில்லை.

* 1915 டிசம்பர் 1 இல் ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் அமைக்கப்பட்ட இந்திய சுதந்திர சர்க்காரின் வெளியுறவுத்துறை அமைச்சராக செண்பகராமன் நியமிக்கப்பட்டார்.

* 1930 இல் இந்தியத் தொழில் வர்த்தக சம்மேளனப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார். இதன்மூலம் இந்தியாவுக்கு ஆதரவு திரட்ட முயன்றார்.

* அமெரிக்காவுக்கும் தென் ஆப்பிரிக்காவுக்கும் சென்று கறுப்பின மக்களுக்கு ஆதரவாகப் போராடினார்.

* 1931 இல், இந்திய விடுதலைக்குப் போராடிய புரட்சிப் பெண்மணி மேடம் காமா அம்மையாரின் வளர்ப்பு மகளான லெட்சுமிபாய் என்பவரைத் திருமணம் செய்து கொண்டார் – ஜெர்மனி சென்ற மோதிலால் நேரு, ஜவஹர்லால் நேரு போன்ற பல தலைவர்கள் செண்பகராமன் இல்லத்தில் தங்கினர்.

* இந்திய தேசியத் தொண்டர் படையை (Indian National Volunteers Corps) உருவாக்கினார். இதுவே நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் உருவாக்கிய இந்திய தேசிய இராணுவத்திற்கு (INA) முன்னோடியாகும்.

* வியன்னாவில் செண்பகராமன் – சுபாஷ் சந்திரபோஸ் சந்திப்பு நடந்தது.

* ஜார் ஆட்சிக்கு எதிராகப் புரட்சி செய்து ஜெனிவாவில் தலைமறைவாக இருந்த ரஷ்யப் புரட்சியின் தலைவர் லெனினை பலமுறை செண்பகராமன் சந்தித்தார். லெனினின் பாராட்டைப் பெற்றார்.

★ ஜெர்மன் சர்வாதிகாரி ஹிட்லரை அடிக்கடி சந்தித்த செண்பகராமனிடம் ஒருமுறை ஹிட்லர், "இந்தியர்கள் சுதந்திரம் பெறத்தகுதியற்றவர்கள்" என்று கூறவே, இதற்கு செண்பகராமன் எதிர்ப்புத் தெரிவித்ததைத் தொடர்ந்து ஹிட்லர் வருத்தம் தெரிவித்தார்.

★ ஹிட்லர் வருத்தம் தெரிவித்ததை ஏற்க முடியாத நாஜிக்கள், விருந்து ஒன்றில் செண்பகராமனின் உணவில் மெல்லக் கொல்லும் விஷத்தைக் கலந்தனர். உடல் நலிவுற்ற செண்பகராமனுக்கு ஜெர்மனியில் சிகிச்சை அளிக்கப்பட்டது. அது பலனளிக்கவில்லை, இதனால் அவர் மனைவி லெட்சுமிபாய் செண்பகராமனை இத்தாலிக்கு அழைத்துச் சென்றார்

★ 1934 மே 26 ஆம் நாள் செண்பகராமன் உயிர் நீத்தார்.

★ செண்பகராமனின் மனைவி லெட்சுமிபாய் தன் கணவரின் அஸ்தியுடன் 1936இல் இந்தியா வந்து மும்பையில் தங்கினார்.

★ செண்பகராமனின் விருப்பத்திற்கிணங்க அவரது அஸ்தி 1966இல் கரமனை ஆற்றிலும் குமரிமுனையிலும் கரைக்கப்பட்டது.

★ ★ ★

வெளியீடு :
இயக்குநர், செய்தி -மக்கள் தொடர்புத்துறை,
சென்னை - 9.

வடிவமைத்து அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம், சென்னை - 2.